'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI நவம்பர் கி.பி. 2025 சான்று : 191



## நிலைவாழ்வில் எதிர்நோக்கு

# புதிய பணியாளர்கள் பயிற்சி


சிவகங்கை


அருள்சான்று நிலையம்


சாயல்குடி


பாடலூர்


தங்கச்சிமடம்


சி.கே. மங்கலம்


அம்மாபேட்டை


நமணசமுத்திரம்


புதுக்கோட்டை


திருமயம்

# உங்கள் சகோதரனிடமிருந்து

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

'என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும்' (லூக் 9: 23 )என்று இயேசு ஆண்டவர் அழைக்கின்றார். இயேசுவைக் காண வேண்டும் என்ற இலக்கோடு எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் பயணித்துக் கொண்டிருக்கிற நமக்கு இயேசு தரும் கட்டளை இதுதான். நாம் அனைவரும் இந்த இறை வார்த்தை தரும் அழைப்பிற்கேற்ப தன்னலம் துறக்க செபிக்கிறேன், வாழ்த்துகிறேன்.

சில தமிழ் மொழிபெயர்ப்புகளில் 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து' என்றும், 'தன்னைத்தானே பரித் தியாகம் செய்து' என்றும் 'தன்னையே மறுத்து' என்றும் உள்ளன. ' வாழ்வோர் இனி தங்களுக்கு என வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர் பெற்றெழுந்தவர்க்காக வாழ வேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார் (2கொரி 5:15) என்று பவுலடியார் மிகுந்த அழுத்தத்தோடு கூறி இருப்பதை இங்கு நினைவு கூறுவோம்.

இயேசுவைக் காண வேண்டும் என்றால், அதையும் உலக வாழ்விலே அனுபவிக்க வேண்டும் என்றால் தன்னை வெறுத்தல், இறத்தல் ஆகியவை நம் வாழ்வில் நடைபெற்றாக வேண்டும். 'நான்' இறக்க வேண்டுமா?. எப்படி இறப்பது? உடல் ரீதியான இறப்பல்ல. மாறாக சுயத்திற்கு இறத்தல் என்று பொருள் கெள்ள வேண்டும். சிறந்த நம்பிக்கையாளர், சிறந்த இறையியளார் ஜார்ஜ் முல்லரிடம் ஒரு முறை வாலிபன் ஒருவர் சென்று உங்கள் நற்செய்திப் பணி வெற்றிக்கு காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு அவர் 'கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன். என் சுயம் மரித்தது. அதுவே என் நற்செய்திப் பணி வாழ்வின் வெற்றிக்கு காரணம்' என்றார். அப்போது அந்த வாலிபன் சுயத்திற்கு மரிப்பது, தனக்குள் இறப்பது என்றால் என்ன? என்று கேட்டான். அதற்கு, 'தம்பி கல்லறைக்கு போய் இறந்தவர்களின் பெயரை வாசித்து அவர்களை உன் மனம் போல் வாய்க்கு வந்தபடி எல்லாம் பழித்து பேசு. பிறகு கொஞ்ச நேரம் கழித்து புகழ்ந்து பேசு. அப்புறம் என்னிடம் வா' என்று சொல்லி அனுப்பினார். அப்படியே அந்த வாலிபன் கல்லறைக்கு சென்று அவர்களைப் பழித்தும் புகழ்ந்தும் பேசிவிட்டு திரும்பி வந்தார். முல்லர் அவரிடம், 'நீ கடினமாக பேசின போது கல்லறைக்குள் அடக்கம் பண்ணப்பட்டவர் உன் மேல் சீறினாரா?' என்று கேட்டார். 'இல்லை .ஒரு பதிலும் பேசவில்லை' என்றான். 'சரி. நீ புகழ்ந்து பேசும்போது பெருமை அடைந்து உன்னை பாராட்டினாரா?' என்றார். அதற்கும் 'இல்லை' என்றான். சுயம் மரிப்பது (தங்களுக்குள் இறப்பது) அது புகழுரை நம்மை பெருமைப்படுத்தவும் கூடாது. பழிப்புரை நம்மை பாதிக்கவும் கூடாது. உயிரைத் தந்த கிறிஸ்துவிற்காய் எதையும் பெற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதுதான் சுயத்திற்கு மரித்தல்' என்று ஜார்ஜ் முல்லர் கூறினார்.

'இயேசு இறந்தார். பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார் அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறு நீங்களும் பாவ வாழ்க்கையை பொருத்தமட்டில் இறந்தவர்கள். கிறிஸ்துவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள் (உரோ6:10,11) என்று புனித பவுலடியார் தெளிவாக ஆலோசனை தருகிறார்.

சிலை வழிபாடு குறித்து மிக விரிவாகப் பேசுகிறோம், போதிக்கிறோம். 'சுயம் அல்லது நான்' என்பது மிக உச்சமான சிலை வழிபாடுகும். இது கடவுளிடமிருந்தும்

மனிதர்களிடமிருந்தும் நம்மை அன்னியப் படுத்துகிறது. 'முழு மனதோடு ஆண்டவரை நம்பு. உன் சொந்த அறிவாற்றலை சார்ந்து நில்லாதே' (நீமொ 3:5) என்றும் 'உன்னை நீ ஞானி என்று எண்ணிக் கொள்ளாதே' (நீமொ 3:7) என்றும் திருவிவிலியம் கூறுகிறது. நான் ,எனது, என்னுடையது என்ற மனநிலை இருக்கும் போது நம்மையே உயர்த்துகிறோம். 'SIN'என்றால் பாவம். அதில் நடுவில் உள்ள எழுத்தை கவனியுங்கள். 'I' என்ற எழுத்து வருகிறதா?. சில எடுத்துக்காட்டுகளை காண்போம். யாராவது நம்மைக் கடுமையாகப் பேசி விட்டால், நம்மைப் பார்த்து சிரிக்காவிட்டால், வாழ்த்து சொல்லாவிட்டால், நம்மைக் கண்டு கொள்ளாமல் விட்டால் நமது நிலை என்ன? நாம் மருத்துவமனையில் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்து வருகிறோம். நம்மைச் சார்ந்தவர்கள் அல்லது பணிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் யாரும் நம்மை வந்து பார்க்கவில்லை. நலம் பெற்று வந்து அந்த மனிதர்களை சந்திக்கிறோம். என்னை பார்க்க ஒருவர் கூட வரவில்லை என்று மனதில் ஆதங்கப்படுகிறோம். செய்தி, பாடல் சிறப்பாக செய்கிறோம். யாரும் பாராட்டவில்லை என்று ஆதங்கப்படுகிறோம். இந்த நிலை இருந்தால் நம்மை ஆராதித்து சிலை வழிபாடு செய்கிறோம் என்பதை புரிந்து கொள்வோம்.

அதற்காக நாம் நலம் விசாரிக்கவோ, பாராட்டவோ, நோயாளிகளை சந்திக்கவோ வேண்டாம் என்று கூறவில்லை. நமக்கு அது நடக்காவிட்டால் நம் நிலைப்பாட்டினைத் தான் எழுதுகிறேன். கல்லறையில் இருப்பவர்களிடம் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இருக்காது. எதிர்பார்ப்பு என்பது தன்னை வெறுப்பதற்கு மிகப்பெரிய தடையாய் இருக்கிறது. தன்னை வெறுத்தல் என்பதன் அடையாளம் தாழ்மையோடு இருத்தல் ஆகும்.

'நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம்' (2தீமோ 2:11) என்று புனித பவுலடியார் கூறுகிறார். அவரைப் பின்பற்ற விரும்புகிற நாம், அவருடைய சீடர்களாய் வாழ விரும்புகிற நாம், அவரோடு இறக்கத் தயாராக இருக்க வேண்டும். 'நான்' என்னில் வாழும் வரை அவர் என்னில் வாழ முடியாது என்பதை புரிந்து கொள்வோம் 'கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு இருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா 2:19,20) என்று புனித பவுலடியார் தன் சுய மறுப்பை, தன்னை வெறுத்தலை, தனக்கென இறத்தலை அழகாக சுட்டிக் காட்டுகிறார்'

இயேசு கிறிஸ்து நம்மில் வாழ வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் இறந்து தான் ஆக வேண்டும். இந்த இறப்பு உடல் அளவில் இறப்பதைக் குறிக்காது. நமது திருஅவையின் எண்ணற்ற புனிதர்கள் காட்டிய பாதையும் அதுதான். அவர்கள் அத்தனை பேரும் தங்களுக்கென இறந்தவர்கள். 'போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. புகழுவார் புகழும் இகழ்வார் இகழ்வும் எங்களைப் பாதிப்பதில்லை' (2கொரி 6:8) என்று புனித பவுலடியார் தெளிவாகக் குறிப்பிடுகிறார். தன்னை வெறுத்தவர்களின், சுயத்திற்கு மரித்தவர்களின், தங்களுக்கென இறந்தவர்களின் அடையாளம் இதுதான். நம்மில் இயேசு வெளிப்பட இது மிக மிக அவசியம். இதை நாம் அனுபவிக்காவிட்டால் நிச்சயமாக நமது எதிர்நோக்கின் திருப்பயணத்தின் இறுதியில் இயேசுவை காண முடியாது. இங்கு உணர முடியாத, காண முடியாத இயேசுவை எங்குமே காண முடியாது. எனவே தன்னை வெறுக்கிற , தன்னலம் துறக்கிற, தங்களுக்கென என இறக்கிற தீர்மானத்தை இன்றே எடுப்போம். அதற்கான உதவியை கடவுளிடமிருந்தே பெறுவோம். ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி- I, தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 11.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 13 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரியகிரகோரி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 12.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GM.S ராணி, நற்பணி A.பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 12.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி V. செங்கோல்மேரி, செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 12.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 4 நபர்கள் கலந்து கொண்டனர் இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 12.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. சகாயமேரி, செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 12.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 4 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி A.ஜான்சிமேரி, நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 19.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 8 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. செலின்பிரபா, நற்பணி M. மரியகிரகோரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 19.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IX சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 19.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி P. அமலோற்ப ஆரோக்கியராணி, நற்பணி A. சகாய தமிழ் செல்வி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 26.10.2025 அன்று நடைபெற்றது. இதில் 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி தை. அமல்ராஜ், நற்பணி அ. ஆரோக்கியமேரி, நற்பணி S.தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

அக்டோபர் 2025

## கடந்த மாதச் செயல்பாடுகள்

30.09.2025 முதல் 8.10.2025 வரை அமலவை அருட்சகோதரிகள் 9பேர் அமைதியகத்தில் நற்செய்தி அறிவிப்புப் பணி பயிற்சியிலும் திருவெற்றியூர், ஏ.ஆர். மங்கலம் பங்குகளில் களப்பணியிலும் ஈடுபட்டனர்.

01.10. 2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 31 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A.

ஆரோக்கியசாமி, நற்பணி B. ஸ்டெல்லாமேரி, நற்பணி இருதயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

01.10. 2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி P.மரிய ஜீவநாதன், நற்பணி A. ஜெயசீலன், நற்பணி A. மேன்லின் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

04.10. 2025 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் நடைபெற்ற பரிந்துரை செபத்தில் செஞ்சை வட்டார பணியாளர்கள் நற்பணி ஏஞ்சல் நிர்மலா, நற்பணி செல்வி ஜோஸ்பின் செபமாலை மேரி, நற்பணி தைனேஸ், நற்பணி S. எலிசபெத்ராணி ஆகியோர் பங்கேற்றனர்.

05.10.2025 சிவகங்கை மறைமாவட்ட ஓரியூர் திருப்பயணம் சிறப்பாக நடைபெற்றது. திருப்பயணத்தில் பணியாளர்கள் உணவு பரிமாறும் பணியை சிறப்பாக செய்தார்கள்.

05.10.2025 அன்று புதுக்கோட்டை திரு இருதய கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோணி பிரகாஷ், நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

05.10. 2025 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A.R.சூசைராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

6 முதல் 17 அக்டோபர் 2025 ஆகிய நாள்களில் மரியின் ஊழியர் சபை சகோதரிகள் மூவர் அருள்சான்று நிலையத்தில் நற்செய்தி அறிவிப்புக் பணி பயிற்சியும் சாயல்குடி பங்கில் களப்பணியும் மேற்கொண்டனர்.

10.11& 12.10.2025 ஆகிய நாள்களில் கும்பகோணம் மறைமாவட்டம் புள்ளம்பாடி பங்கில் நற்பணி அருள் மரியநாயகம், நற்பணி சேவியர் ஜோசப், நற்பணி இராஜேந்திரன், நற்பணி ஜோசப் ஆரோக்கியசாமி ஆகியோர் களப்பணியாற்றினார்கள்.

10.11&12.10.2025 ஆகிய நாள்களில் ஆண்டுத்தியானம்-IV அமையதியகத்தில் நடைபெற்றது. 64 பணியாளர்கள் கலந்து கொண்ட இத்தியானத்தை அருள்பணி ஜெயக்குமார் **MSFS** நெறிப்படுத்தினார்கள்.

12.10. 2025 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்

12.10. 2025 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M.லூயி ஜான்போஸ்கோ, நற்பணி A. யூஜின் அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

17,18&19.10.2025 அன்று ஆண்டுத்தியானம்-V அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. 54 பணியாளர்கள் கலந்து கொண்ட இத்தியானத்தை அருள்பணி ஜெயக்குமார் **MSFS** நெறிப்படுத்தினார்கள்.

19.10.2025 அன்று அம்மாபேட்டை புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோணி பிரகாஷ் நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

19.10.2025 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

24,25&26.10. 2025 அன்று ஆண்டுத்தியானம்-VI அமையதியகத்தில் நடைபெற்றது 36 பணியாளர்கள் கலந்து கொண்ட இத்தியானத்தை அருள்பணி ஜெயக்குமார் **MSFS** நெறிப்படுத்தினார்கள்.

26.10. 2025 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

26.10. 2025 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை S. அந்தோணி பிரகாஷ், நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

சமூக அறிவியலின் கூற்றுப்படி மனிதன் அடிப்படையாக சமூகத்துடன் இணைந்து வாழ்பவன். மனிதர்கள் ஒருவரை ஒருவர் நம்புவதாலே உறவுகள் உண்டாகின்றன; சமூகங்கள் உருவாகின்றன. ஒரு சமூகத்தின் அடிப்படை குடும்பம். குடும்பத்தை நிலைப்படுத்துவது ஒருவருக்கு மற்றவரிடம் உள்ள நம்பிக்கையாகும். ஒரு இளைஞனும் இளம் பெண்ணும் ஒருவரையொருவர் நம்புவதால் திருமணம் என்ற உறவு ஏற்படுகின்றது; ஒரு குடும்பம் இவ்வுலகில் அமைகிறது. ஆனால் நம்பிக்கை இழந்தால் குடும்ப உறவுகள் முறிந்து விடுகின்றன. மனித உறவு இவ்வாறென்றால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை எவ்வாறு புரிந்து கொள்வது?.

இறைவனின் அழைப்பிற்கு மனிதனின் பதில் நம்பிக்கை. எல்லா வெளிப்பாடுகளின் நிறைவு இயேசு (எபி 1:1-2). நமது முன்னோர்களிடம் இறைவன் பல காலங்களில் பல முறைகளில் கூறியவை பழைய ஏற்பாட்டில் காணலாம். ஆனால் அதன் முழுமையை நாம் இயேசுவிலும் அவரது வார்த்தைகளிலும் காணலாம். திருச்சட்டத்தையோ இறை வாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை அழிப்பதற்கல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன் (மத் 5:17).

இறைவனைப் பற்றிய தவறான புரிதல்கள் அனைத்தும் இயேசு மாற்றினார். இறைவனைத் தண்டனை தருபவராகவும் அச்சம் ஏற்படுத்துபவருமாகக் மக்கள் கருதினர். குருக்களும் மக்களும் ஆண்டவரிடம் வருவதற்கான எல்லை மீற வேண்டாம் இல்லையெனில் ஆண்டவர் அவர்களை அழித்தொழிப்பார் (விப 19:24) என்று விவிலியம் கூறுகிறது.

மக்கள் நடுநடுங்கித் தூரத்தில் நின்று கொண்டு மோசேயை நோக்கி "நீர் எங்களோடு பேசும் நாங்கள் கேட்போம். கடவுள் எங்களோடு பேசவே வேண்டாம். ஏனெனில் நாங்கள் செத்துப் போவோம் (விப 20:19) என்றனர். மோசே உம்மாட்சியை எனக்குக் காட்டும்படி வேண்டுகிறேன் என்று கூற, ஆண்டவர் என் முகத்தையோ உன்னால் பார்க்க இயலாது. ஏனெனில் என்னைப் பார்த்த எவரும் உயிரோடிருக்க முடியாது" என்றார் (விப 33:18-20).

இயேசு வழியாக வெளிப்படுத்தப்பட கடவுளின் முகம் அன்பின், இரக்கத்தின் முகமாகும். இறைவன் மக்கள் நடுவில் வாழ்கிறார் (மத் 1:23). இயேசு கடவுளை மக்களின் பாவங்களை நிபந்தனையின்றி மன்னிப்பவராக வெளிப்படுத்தினார் . விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்ணிடம் நானும் தீர்ப்பு அளிக்கவில்லை நீர் போகலாம் இனி பாவம் செய்யாதீர் (யோவா 8:11) என்றார்.

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம் (1 யோவா 3:16). மேலும் அவர் தமது உடலையும் இரத்தத்தையும் நமக்காக வழங்கினார் (மத் 26:28). இவ்வாறு இறைவன் இயேசு வழியாக தம் அன்பை வெளிப்படுத்தியதே புதிய ஏற்பாடு. நம்பிக்கை வளர்ச்சியின் முதல் நிலை அன்பு. ஆண்டவருடன் உள்ள உறவு ஆழம் பெறும்போது செல்லும்போதே நம்பிக்கை முதிர்ச்சி அடைகிறது.

அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் (யோவா 1:12).

நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம். கடவுளின் மக்களாகவே இருக்கிறோம் (1 யோவா 3:1).

யூத கிரேக்க பண்பாட்டில் அடிமைகளுக்கு தங்கள் தலைவர்களை தந்தையே என்று அழைக்கும் உரிமை கிடையாது. இயேசு இறைத்தந்தையை தந்தையே என்று அழைத்து (மத் 11:25-26 லூக்கா 10:21 யோவா 11:41, 17:24-25) அவ்வாறே நமக்கும் கற்பித்தார். இந்த அறிவே நம்மை உரிமைப் பேறு உடையவர்களாய் மாற்றுகிறது (உரோ 8:17).

இறைவனை தந்தையாகப் பெற்றுள்ள நாம் இறையன்பின் வழியாக நம்பிக்கையில் நாளும் வளர்வோம்.

நற்பணி. V. **செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

# ஆடுகளுக்கு வாயில் நானே

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே (யோவா 11:25).

நம் ஆண்டவர் நமக்கு உயிர்த்தெழுதலும் வாழ்வுமாக இருக்கிறார். அவர் கூறிய இந்த வார்த்தையை உலகில் வேறு எந்த ஒரு மனிதரும் கூறியதாக வரலாறே இல்லை. ஏனென்றால் இறப்பிற்கு பிறகு ஒரு வாழ்வு உண்டு என்பதை உலக மனிதர்கள் பெரும்பாலோனோர் நம்புவதில்லை. ஒருவர் இறந்துவிட்டால் அத்தோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று கருதுகிறார்கள். இறந்து போனவர்களின் உடலையும் எரித்து விடுவார்கள். அப்படிப்பட்ட மனிதர்களைக் குறித்து அழிவே அவர்கள் முடிவு வயிறே அவர்கள் தெய்வம் மானக்கேடே அவர்கள் பெருமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவைப்பற்றியே. ஆனால் விண்ணகமே தாய்நாடு என்று பவுல் குறிப்பிடுகிறார் (பிலி 3:19-20). இறப்பிற்குப் பிறகு நிலைவாழ்வு உண்டு என்று நம்புகிறோம். கல்லறையில் அடக்கம் செய்யும் அனைவருக்கும் ஆண்டவர் வாக்களித்துள்ள நிலை வாழ்வு கிடைக்குமா? மனித இறப்பில் இரண்டு வகை உண்டு. ஆவிக்குரிய இறப்பு உடலுக்குரிய இறப்பு. இதை ஆதாம் ஏவாளுடைய வாழ்க்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆண்டவராகிய கடவுள் ஆதாம் ஏவாளிடம் விலக்கப்பட்ட கனியைத் தின்னும் நாளில் சாகவே சாவாய் என்றார். (தொநூ 2:27) ஆனால் அதன் பின்பு ஆதாம் தொள்ளாயிரத்து முப்பது ஆண்டு காலம் வாழ்ந்து இறந்தார் (தொநூ 5:5). கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது ஆதாமைப் போல ஆன்மாவில் இறந்து விடுகிறோம். ஊதாரி மகன் திரும்பி வந்தபோது அவன் தந்தை என் மகன் இவன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான் என்றார் (லூக் 15:24). பாவத்தில் ஆன்மா இறந்து போனதைக் கண்ட ஆண்டவர் சிறுமி இறக்கவில்லை உறங்குகிறார் என்றார் (மாற் 5:39). அவ்வாறே இறந்து போன இலாசரைப் பற்றி அவர் கூறும்போது நம் நண்பன் இலாசர் தூங்குகிறார் என்றார் (யோவா 11:11-14). நம்முடைய உடல் இறப்பு என்பது உறங்கி ஓய்வெடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் பாவம் செய்யும்போது நம்முடைய ஆன்மா இறந்துவிடுகிறது. ஏனெனில் பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு (உரோ 6:23). இந்த ஆன்மா இறப்பிலிருந்து நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது. ஏனெனில் எல்லா மனிதரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர் (உரோ 3:23). இப்போது இந்த பாவத்தின் கொடூரத்திலிருந்து நம்மை மீட்க ஒரு மனிதர் தேவை. ஆனால் அவர் பாவமில்லாதவராக இருக்க வேண்டும். பாவம் செய்த மனிதனுக்குச் சாவு உறுதி. அதில் எந்த மாற்றமும் இல்லை. அந்த வேளையில் அந்த மனிதனை சாவிலிருந்து மீட்கவும் வேண்டும். ஏனெனில் மனுக்குலம் வாழ்நாள் முழுவதும் சாவு பற்றிய அச்சத்தினால்

அடிமைப்பட்டிருந்தது (எபி 2:15). இந்த நிலையில் தான் நம் தந்தையாம் கடவுள் தன் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார் (யோவா 3:16). பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார் (2 கொரி 5:21). எனவேதான் புனித பவுல் பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு என்று கூறி விட்டு கடவுள் கொடுக்கும் அருள் கொடை, நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு என்கிறார் (உரோ 6:23). அப்படியானால் நாம் உலகில் வாழும்போது ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து அவரோடு இணைந்து வாழ்ந்தால் மட்டுமே நிலை வாழ்வு இதில் சமரசம் செய்ய எந்த வாய்ப்பும் இல்லை. இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார் என்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது (1 தெச 4:14) அது மட்டுமல்ல கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர் (1 தெச 4:16). இதைப் பற்றி ஆண்டவரே கூறும்போது காலம் வருகிறது. அப்போது கல்லறையில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர் (யோவா 5:28-29). அவரை அறிந்து அவர் மீது நம்பிக்கை வைத்து அவரை மட்டுமே சார்ந்து வாழ்பவர்கள்தான் அவரது குரலைக் கேட்க முடியும். இன்றைக்கு அன்னை மரியாவையும், புனிதர்களையும் வழிபட்டுக் கொண்டு நற்கருணையையும் வாங்கிக் கொண்டு அவரைப் பற்றிய அறிவே இல்லாதவர்கள் நிலை என்ன ஆகும்? அப்போது அவர் தீப்பிழம்பின் நடுவே தோன்றி கடவுளை அறியாதவர்களையும் நம் ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை ஏற்காதவர்களையும் தண்டிப்பார் (2 தெச 1:8). இயேசு ஆண்டவர் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்பே தந்தையாம் கடவுள் இதுபற்றி கூறியிருக்கிறார். உன்னைப் போல் ஓர் இறைவாக்கினரை அவர்களுடைய சகோதரர்களினின்று நான் அவர்களுக்காக ஏற்படுத்துவேன். என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன். நான் கட்டளையிடுவது அனைத்தையும் அவர் அவர்களுக்குச் சொல்லுவார். என் பெயரால் அவன் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் வேரறுப்பேன். இது நம் ஆண்டவரைப் பற்றியது (இச 18:18-19) எனவேதான் நம் ஆண்டவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் நானாக பேசவில்லை. இது என்னை அனுப்பியவரின் வார்த்தை என்று அடிக்கடி கூறுகிறார். இதே பகுதியை பேதுரு குறிப்பிடுகையில் அந்த இறைவாக்கினருக்கு செவி சாய்த்துக் கீழ்படியாத எவரும் மக்களினின்று அடியோடு அழிக்கப்படுவர் என்கிறார் (திப 3:20-21). எனவேதான் நீங்கள் அச்சத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள் என்று பவுல் கூறுகிறார் (பிலி 2:12). உயிரோடு இருக்கும்போதே அவர் நமக்காக ஏற்படுத்தியுள்ள மீட்பைப் பற்றி அறிந்து கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை உணர்வோம். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்றார் (யோவா 11:25). நம்முடைய உயிர்த்தெழுதலும் வாழ்வும் அவர் கையில் உள்ளன. அவருக்கும் நமக்கும் உள்ள உறவு எப்படியிருக்க வேண்டும் என்பதை புனித பவுல் கிறிஸ்து என்ற ஒரே மணமகனுக்கும் உங்களுக்குமிடையே மண ஒப்பந்தம் செய்துள்ளேன். அவர்முன் உங்களைக் கற்புள்ள கன்னியாக நிறுத்தவே வேண்டுமென்பதே என் விருப்பம் என்கிறார் (2கொரி 11:2). இந்த இறைவார்த்தையைத் திரும்பத் திரும்ப தியானித்தால் நாம் நிலைவாழ்வுக்கு எவ்வளவு தூரத்தில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளலாம். எனவே நமக்கு உயிர்த்தெழுதலும் வாழ்வுமாய் இருப்பவரை எப்போதும் எதிர்கொள்ள ஆயத்தமாய் இருப்போம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

# வாழ்வுக்கு வழி

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் இரண்டுவிதமான வாயில்கள் இருக்கின்றன. ஒன்று, வாழ்வுக்குச் செல்லும் இடுக்கமான வாயில். மற்றொன்று, அழிவுக்குச் செல்லும் அகன்ற வாயில். இந்த இரண்டைத் தவிர வேறொன்று இருப்பதாக திருவிவிலியத்தில் சொல்லப்படவில்லை. ஆகவே, இந்த இரண்டில் ஒன்றை நாம் தேர்ந்தெடுத்தாக வேண்டும்.

**அ) அழிவுக்குச் செல்லும் அகன்ற வாயில்**

மனிதன் பாவமூட்டைகளோடும் பெருமையாகிய சுமைகளோடும் சிற்றின்பப் பைகளோடும் இதன் வழியாகச் செல்லமுடியும். ஏனென்றால், இது அகலமானது. இது பாதாளத்திற்கு இட்டுச் செல்லும் பாவம் நிறைந்த வாயில். இதில் நுழைய எந்தவித கட்டுப்பாடுகளோ தடைகளோ இல்லை. இவ்வுலக மக்களுக்கு நலமானதாகத் தோன்றும் வாயில். ஆகவே, இந்த வாயிலில் பெரும்பாலான மக்கள் நுழைய விரும்புகின்றனர். ஆனால், இது அழிவுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை அறியாமலேயே நுழைகின்றனர். இவர்கள் செல்கிற இடம் நரகம் என்றும், பாதாளம், நெருப்புக் கடல், தீச்சூளை, சாத்தானுக்கும் அதன் தூதர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட இடம் அழுகையும் அங்கலாய்ப்பும் நிறைந்த இடம் என்றும் திருவிவிலியம் கூறுகிறது. இந்தப் பெயர்களைக் கொண்டே அது எவ்வளவு பயங்கரமானது என்பதையும், அதில் நுழைபவர்கள் எத்துணை வேதனை அடைவார்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. 'இந்த தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்' (லூக் 16:24) என்று பாதாளத்திலிருந்து கதறும் செல்வந்தரின் நிலைமையே இவ்வளவு வேதனை நிறைந்ததாக இருக்குமென்றால் நரகத்தின் வேதனை எவ்வளவு கொடூரமானதாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

**நானே வாயில்** (யோவா 10:9)

**ஆ) வாழ்வுக்குச் செல்லும் இடுக்கமான வாயில்;**

மனிதன் பாவமூட்டைகளையோ, சிற்றின்பப் பைகளையோ, விருப்பமான சரக்குகளையோ இதன் வழியாகக் கொண்டு செல்லமுடியாது. ஏனெனில், இது குறுகலானது. ஆகவே, பெரும்பாலான மக்கள் இதில் நுழைவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மனிதன் தன் சொந்த முயற்சிகளை விட்டுவிட்டு, இறை அருளைத் தேடி, அவர் தயவை நாடி இவ்வழியைக் கடந்து செல்லவேண்டும். அதாவது, இயேசுவின் பொருட்டு பாடுகளில் பங்குபெற்று (மத் 5:10-12) நம்பிக்கையுடன் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, தொடர்ந்து தூய்மையாக வாழ்ந்து முடிவுவரை அவரையே அணுகிச் செல்லும் இடுக்கமான வாயில். இது பாடுகள் நிறைந்த குறுகலான வழி. இக்காலத்துப் பாடுகள் இனி வெளிப்பட போகும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவை அல்ல என்பதைக் காட்டும் வழி. இந்த இடுக்கமான வாயிலில் நுழைவோர் பேறுபெற்றோர். ஏனெனில், விண்ணகத்தில் இரண்டு அதிர்ச்சியூட்டும் அதிசயங்கள் காத்திருக்கும்.

- நாம் எதிர்பார்க்கும் சிலர் அங்கு இருக்கமாட்டார்கள்.
- நாம் எதிர்பார்க்காத பலர் அங்கு இருப்பார்கள்.

ஆகவே, 'விவேகமுள்ளவன் செல்லும் பாதை பாதாளத்திற்கு செல்லும் பாதை அல்ல. அது வாழ்விற்குச் செல்லும் பாதையாகும்' (நீமொ 15:24)

**இ) இயேசுவே வாயில், அவரே வழி**

'நானே வாயில்' என் வழியாக நுழைவோருக்கு ஆபத்தில்லை (யோவா 10:9) என்றும், 'வழியும் உண்மையும் வாழ்வும் நானே' என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா 14:6) என்றும் இயேசு கூறுகிறார். இறைவாக்கினர்களும், திருத்தூதர்களும் கடவுளைக் கண்டடையும் வழிகளைப் பற்றிப் போதித்தார்கள். ஆனால், இயேசு ஆண்டவர் 'வழியாகவே' வெளிப்பட்டார். இங்கே கடவுள் யார் என்பது செய்தி அல்ல. கடவுளை அடைய ஒரே வழி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே, அவர் வழியாகவே இடுக்கமான வாயிலில் நுழையமுடியும். ஏனெனில், 'இயேசுவே வாயில், அவரே வழி' என்ற உண்மையை உணர்ந்தவர்களாய் அவர் பாதம் பணிந்து, அவர் வழியாய் நுழையும்போது நாம் 'எப்பக்கம் சென்றாலும் 'இதுதான் வழி' இதில் நடந்து செல்லுங்கள்.' என்னும் வார்த்தை பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும்'

**நானே வழி** (யோவா 14:6)

**ஈ) இயேசுவே வாழ்வு:**

இயேசுவால் அன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை (திப 4:12) அவரே வாழ்வு. ஆகவே, மனிதன் தன் சொந்த முயற்சியால் கடவுளைக் கண்டுகொள்ளலாம் என்று எண்ணிவிடக் கூடாது. ஏனென்றால், கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை, காணவும் முடியாது. கடவுள் தன்மை கொண்ட ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார் (யோவா 1:18). ஆகவே இயேசுவை நம்புகிற அனைவரும் வாழ்வு பெறுவர். இயேசுவை நம்பிக் கொள்ளாதோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர் (யோவா 3:15-18). மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே தந்தையின் திருவுளம் (யோவா 6:40). ஏனென்றால் நம் குற்றங்களுக்காக இயேசு காயமடைந்தார். நம் தீச்செயலுக்காக நொறுக்கப்பட்டார். நமக்கு நிலைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் (எசா 53:5).

ஆகவே, இயேசுவை நம்பிக்கொண்ட மக்கள் கூட்டத்திற்கென இறைவனால் ஏற்பாடு செய்திருக்கின்ற இடம் மகிமை நிறைந்தது, மனித அறிவுக்கு எட்டாதது. கடவுள் தாமே கட்டி உருவாக்கின வீடு, இறைவனின் உறைவிடம், புதிய எருசலேம் விலைமதிக்க முடியாத இரத்தினக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை. இறைவன் நமக்காக ஏற்பாடு செய்திருக்கிற விண்ணகக் கானான் என்றும், இவை மனிதக் கண்களால் பார்க்க முடியாததும், இதயங்களில் நினைத்துப் பார்க்க முடியாததுமான மிக உன்னதமான இடம் (1 கொரி 2:9) என்றும் திருவிவிலியம் கூறுவதிலிருந்து, இது எத்துணை மகிமை பொருந்தியது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

முடிவுறாத பேரன்பும் தீர்ந்து போகாத இரக்கமும் கொண்ட இரக்கத்தின் ஆண்டவரே (புல 3:22), உம்மையே நம்பி உம் வழியாக முடிவில்லா வாழ்வைப் பெற்று மகிழ அருள்புரிவீராக.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்; படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள். | **திருப்பாடல்கள்** 4:4 |

'என் நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அனணத்து விட முடியும்'

நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் அதுவும் பணியாளர் வாழ்வில் இருளின் பிடியிலிருந்தும், அலகையின் ஏமாற்று வழிகளிலிருந்தும், அலகையின் கோபமான தாக்குதல்களிலிருந்தும் நாம் எளிதாய் கடந்து வர நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். நம் நம்பிக்கை உறுதியானதாக இல்லை என்றால் நம்மிடம் இருக்கின்ற சின்ன சின்ன இடைவெளிகள் வழியாக அலகை தந்திரமாய் நமக்குள் நுழைந்து நம் ஆன்மாவைக் கொல்வதற்கு வேகமாக வேலை செய்ய ஆரம்பித்து விடுவான். கடந்த இரண்டு மாதங்களாக நம் துன்ப வேளைகள் தான் நமது நம்பிக்கையை மெய்ப்பிக்கும் உலைக்கலன்கள் என்று தியானித்து வருகின்றோம்.

'துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை' (2கொரி4:9). துன்பங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும் போதெல்லாம் நம்மைக் காண்கின்ற நம் கடவுள் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை. அலகையின் சூழ்ச்சியினால் நாம் வீழ்த்தப்பட்டவர்கள் போல் எண்ணினாலும் நம் ஆண்டவர் ஒருபோதும் நாம் அழிந்து போவதற்கு நம்மை அனுமதிப்பதில்லை என்பதை நாம் முழுமையாக நம்ப வேண்டும். நான் துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை நான் வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை என்ற நம்பிக்கை அறிக்கை செய்து கொண்டு இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அலகையின் சோதனைகளை எதிர்த்து நிற்க விழிப்பாய் இருப்போம்.'நாங்கள் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை.' (2கொரி4:8) என்பதை புனித பவுல் இன்னல்கள் துன்பங்கள் வரும்போது கடவுள் தன்னோடு இருப்பதை அனுபவித்திருந்ததால் மனம் உடைந்து போவதில்லை என்று சான்று பகர்கின்றார். தன்னுடைய பணி வாழ்வில் குழப்பங்கள் பலவற்றைச் சந்தித்தாலும் நம்பிக்கையை இழக்கவில்லை என்று மன உறுதியோடு அறிக்கையிடுகிறார். ஆனால், நாம் நமக்கு வருகின்ற இன்னல்களின் குழப்பங்களில் நம்பிக்கை இழந்தவர்களாய் மனம் உடைந்து போய் தவித்துக் கொண்டிருக்கின்றோம்.

'நீங்கள் படும் துன்பங்களால் எவரும் மனம் தளர்ந்து போகாதவாறு உங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தி ஊக்குவிக்க அவரை அனுப்பினோம் துன்பங்கள் வந்தே தீரும் என்பது உங்களுக்குத் தெரியும்' (1தெச3:3). துன்பங்கள் வரும்போது மனம் தளர்ந்து போவது சாதாரண மனித இயல்பு. துன்பங்களில் மனம் தளர்ந்து போகாதிக்க வேண்டும் என்றால் நமது நம்பிக்கை உறுதியானதாக இருக்க வேண்டும். தெசலோனிக்கத் திருச்சபையில் உள்ள மக்கள் மனம் தளர்ந்து போகாதிருக்க அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தி அவர்களை ஊக்குவிக்க புனித பவுல் திமோத்தேயுவை அனுப்பி வைக்கிறார். நாமும் நம்மில் எவராவது துன்பத்தில் மனம் தளர்ந்து போயிருக்கும் போது இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் உடனிருப்பையும் அவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்த வேண்டும். மற்றவர்களை நம்பிக்கையில்

உறுதிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்ற நாம் நமது நம்பிக்கையில் உறுதியாய் இருக்கின்றோமா என்று பரிசோதித்துக் கொள்வோம். நம்பிக்கை என்னும் கொடையை தூய ஆவியானவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வோம்.

ஆண்டவர் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கை குறைவினால் நமக்கு ஏற்படுகின்ற துன்பங்களை நாமே துயரங்களாகப் பெருக்கி மிகுதியாக்கிக் கொள்கின்றோம். நம்பிக்கை என்னும் கேடயமானது இன்னல்கள் துயரங்களுக்கு நடுவிலும் அதைப்பற்றிய பாதிப்பு எதுவும் இன்றி நம்மை இயல்பான வாழ்க்கை வாழ வழி காட்டுகின்றது. நமது துயரமான சூழ்நிலைகளில் நம்மிடம் நம்மிடம் உள்ள இறை நம்பிக்கை அனைத்தையும் எளிதாகக் கடந்து போகச் செய்கின்றது.

துன்பங்களை ஆண்டவர் நமக்கு அனுமதிக்கின்றார். மூன்று விதமான காரியங்கள் நம்மில் நிறைவேற ஆண்டவர் துன்பங்களை நமக்கு அனுமதிக்கின்றார். 1.நாம் திருத்தப்படுவதற்காக 2. அவருடைய பாடுகளில் பங்குபெற 3. அவருடைய மாட்சியில் பங்கு பெற. 'நான் யார் மீது அன்பு செலுத்துகின்றேனோ அவர்களை கடிந்து தண்டித்து திருத்துகின்றேன் (திவெ3:19). ஆண்டவர் நம் மீது அன்பு வைத்திருப்பதால் நமக்குத் துன்பங்களை அனுமதித்து திருத்துகின்றார். ஒரு தாய் தன் பிள்ளைகளை கண்டித்துத் திருத்துவது போல ஒரு ஆசிரியர் ஒரு மாணவனைக் கண்டித்து திருத்துவது போல ஆண்டவர் நம் மீது கொண்டுள்ள அன்பினால் நம்மை கண்டித்துத் திருத்துகின்றார். என்பதை நமது நம்பிக்கை நமக்குத் தெளிவாகக் கற்றுத் தரும்.

'கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன்' (கொலோ 2:24) என்று புனித பவுல் கூறுவதை நமதாக்கிக் கொள்வோம். நமக்கு வரும் துன்ப துயர நேரங்களில் ஆண்டவர் இயேசு மேலும் பட வேண்டிய துன்பங்களை நான் என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன் என்று புனித பவுல் போல நாமும் நமக்குள் அறிக்கையிடும் போது நமது துன்பம் நமக்கு அமைதியையும் மன நிறைவையும் தருவதாக அமையும். 'எல்லா அருளும் நிறைந்த கடவுள் இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் ஆட்சியில் பங்கு கொள்ள உங்களை அழைத்திருக்கிறார் சிறிது காலத் துன்பங்களுக்கு பின் சீர்படுத்தி உறுதிப்படுத்தி வலுப்படுத்தி நிலை நிறுத்துவார் (1பேதுரு5:10). ஆண்டவர் அவருடைய ஆட்சியில் நம்மையும் பங்கு பெற வைப்பதற்காகவே நம்மை அழைத்திருக்கிறார். கிறிஸ்து இயேசுவின் ஆட்சியில் நாமும் பங்குபெறும் நோக்கில் நமக்குத் துன்பங்களை அனுமதித்து. அதன் மூலம் நம்மைச் சீர்படுத்தி உறுதிப்படுத்தி வலுப்படுத்தி நாம் துன்பங்களால் தளர்ந்து போகாதவாறு நம்மை நிலை நிறுத்துவார். நாம் ஆண்டவர் மீது கொண்டிருக்கிற நம்பிக்கையில் வளரவும். நமது நம்பிக்கையைப் பிறருக்கு பறைசாற்றவும். நமது துன்பச் சூழல்கள் துணை நிற்கின்றன. அலகையும் நம்மை நோக்கி அவன் வீசும் தீக்கணைகளையும் நமது நம்பிக்கை என்னும் கேடயத்தால் வெற்றி கொள்வோம். நாம் எதிர்நோக்கி இருப்பதைப் பெற்றுக் கொள்வோம்.

நற்பணி ச.சகாயராணி, இராம்நகர்.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம்
www.arulchandrunilayam.org

## வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 09 | செஞ்சை<br>9112758641 | நற்பணி J. மேரி புஷ்பம்<br>9489275861 |
| 2. | 09 | சி.கே. மங்கலம்<br>9626303365 | நற்பணி M. மரிய கிரகோரி<br>948696799 |
| 3. | 16 | மகிண்டிமிக்கேல்பட்டணம்<br>95244495693 | நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 4. | 16 | பரமக்குடி<br>9443503294 | செயலர்<br>9787967272 |
| 5. | 16 | காளையார்கோவில்<br>9444712047 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 6. | 16 | கமுதி<br>9443210772 | நற்பணி S.A. அல்போன்ஸ்<br>9994168051 |
| 7. | 23 | சாலைகிராமம்<br>8526754557 | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>9443503294 |
| 8. | 23 | செக்காலை<br>9150579311 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260 |
| 9. | 23 | சிவகங்கை<br>9943165532 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 10. | 23 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 11. | 23 | இராமநாதபுரம்<br>9486037889 | செயலர்<br>9787967272 |
| 12. | 23 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>7010304731 |

## இது சாத்தியமா ?

10 தோழியர் உவமை அதில் ஐந்து பேர் முன்மதியுடையோர்; 5 பேர் அறிவிலிகள் (மத் 25:1-13).

இதே நிகழ்வு நம் வாழ்விலும் நடக்குமா? 10 தோழியர் உவமையைப் போல நமக்கும் கையில் விளக்கு கொடுக்கப்பட்டு வரிசையாக செல்லப்போகிறோமா? இந்நிகழ்வினை நேரடியாக பொருள் கொள்ளலாமா? இல்லை. ஆண்டவர் உவமையாக சொன்ன கதை தான் இது. அப்படியானால் இதுபோன்று நிகழ்வு நம் வாழ்வில் நடக்காதா? கண்டிப்பாக நடக்கும். என்றைக்கு? 14.07.2033 என்று உத்தேசமான ஏதேனும் ஒரு தேதியைக்குறிப்பிட முடியுமா? அப்படியே ஒரு வேளை குறிப்பிட்டாலும் அதுவரை என் வாழ்வை எப்படி வேண்டுமானாலும் தாறுமாறாக அமைத்துக் கொள்ளலாமா? முடியாதல்லவா! நாம் இந்த நொடிப்பொழுதிலிருந்து அந்த ஐந்து முன் மதியுடையோரைப் போலவே எச்சரிக்கையாய் இருந்து, விழிப்பாய் இருந்து மணமகனின் வருகைக்காக காத்திருப்பது எவ்வளவு நல்லது!

என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், குடும்பத்திலும் சரி, சமூக உறவிலும் சரி, கடவுள் விரும்புகிற வழிகளில் நடந்து எச்சரிக்கை உணர்வோடும்,

விழிப்புணர்வோடும் வாழ்ந்து என்னில் இயேசுவை பிரதிபலித்து வாழ்ந்து, மகிழ்ச்சியோடு வாழ்ந்து, அவருக்கு சான்று வாழ்வு வாழ்ந்தேனெனில் இறுதி நாளில் கடவுளை துணிச்சலோடு எதிர் கொள்ளலாமே!

'அறிவுத்தெளிவோடு விழிப்பாய் இருங்கள்' (1பேது.5:7) என்றபடி, விழிப்பாய் இருந்தால், எந்நேரமும் அவருக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து, முன்மதியுடையோரைப்போல வாழ்ந்து கடவுளை மகிழ்ச்சிப்படுத்துவது சாத்தியம் தானே!

-நற்பணி **J. அருள் இளங்கோ** இராம் நகர்.

## புதிய தன்னார்வ நற்செய்திப் பணியாளர்கள் -2025

அர்ப்பணம் ஏற்ற புதிய பணியாளர்களை நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு குடும்பத்திற்கு இயேசுவின் பெயரால் மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

| | பெயர் | ஊர் |
|---|---|---|
| 1. | நற்பணி A. ஜூலியட் இன்பம். | தங்கச்சிமடம் |
| 2. | நற்பணி சே. மெர்லின் ஆரோ. | அக்காள்மடம், பாம்பன் |
| 3. | நற்பணி பெ. பவுல் தவமணி. | இராமநாதபுரம். |
| 4. | நற்பணி வே. அகஸ்டின் ஞானசேகரன். | இராமநாதபுரம். |
| 5. | நற்பணி ஜே. ரோஸ்லின் ஸ்டெபி. | கே. வலசை, இராமநாதபுரம். |
| 6. | நற்பணி பா. தீபா மேரி. | S. மாரியூர் |
| 7. | நற்பணி ஸ்.மனோஜ். | S. மாரியூர் |
| 8. | நற்பணி ஸ். மார்ட்டின். | S. மாரியூர் |
| 9. | நற்பணி அ. செல்வ மேரி. | S.மாரியூர் |
| 10. | நற்பணி P.பானுத்தாய். | S. மாரியூர் |
| 11. | நற்பணி ஜோ.ரதிதேவி. | வி.வி.ஆர். நகர் |
| 12. | நற்பணி ஜா. அந்தோனி அதிர்ஷ்ட வசந்தி. | வி.வி.ஆர்.நகர் |
| 13. | நற்பணி அ. அல்போன்ஸ் ராஜ் | மா. சவேரியார்பட்டணம். |
| 14. | நற்பணி ஜோ. விண்மலர். | மூக்கையூர் |
| 15. | நற்பணி பீ. மார்கிரேட் செல்வி. | மூக்கையூர் |
| 16. | நற்பணி ஆ. ஜோஸ்பின் ராணி. | வெங்கலக்குறிச்சி |
| 17. | நற்பணி ஞா. மரிய சிநேகா. | வெங்கலக்குறிச்சி |
| 18. | நற்பணி அ.கிளமென்ஸ் மேரி | சாங்கமங்கலம், மானாமதுரை |
| 19. | நற்பணி லூ. ஆரோக்கிய விமல். | பீசர்பட்டிணம் |
| 20. | நற்பணி மி.ஜோ. அருள் ஜீவ ரெத்தினம். | இடைக்காட்டூர் |
| 21. | நற்பணி சூ. செபஸ்தியான். | திருவேங்கடம் |
| 22. | நற்பணி செ. செலின் ரீட்டா மேரி. | திருவேங்கடம் |
| 23. | நற்பணி பா. தேவி சுந்தரி | சிவகங்கை |
| 24. | நற்பணி அ. மரியா. | இடையமேலூர் |
| 25. | நற்பணி ர. ரெசி கிளாரா. | சிவகங்கை |
| 26. | நற்பணி அ. அருள் தாஸ். | மாங்காம்பட்டி |
| 27. | நற்பணி D. ஜோசப் ராணி. | புலிக்கண்மாய் |
| 28. | நற்பணி ஜெ. நிர்மலா. | காளையார்கோவில் |
| 29. | நற்பணி ஸ். திவ்யா. | காளையார்கோவில் |
| 30. | நற்பணி ஆ. ஆரோக்கிய மேரி. | ஆண்டிச்சியூரணி |
| 31. | நற்பணி இ. ஆரோக்கியசாமி. | சருகணி |
| 32. | நற்பணி ஆ. அருள் புனிதா. | சருகணி |
| 33. | நற்பணி ஆ. அந்தோணியம்மாள். | உடையாகுளம் |
| 34. | நற்பணி செ. ஆரோக்கிய, சுதா | கோவிந்த மங்களம் |
| 35. | நற்பணி ஜே. அமலா | திருப்பாக்கோட்டை |

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இறப்பு தரும் எதிர்நோக்கு

(யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

சுந்தரி 15 வயதுப்பெண் ... மதுரை இராசாசி அரசு மருத்துவமனையில் என் மகளின் வைத்தியத்திற்காக இருந்த போது எங்களின் செபத்தில் மிக ஆர்வமாய் வந்து கலந்து கொண்ட இளம்பெண். செவிலியர்களிடம் விசாரித்ததில் அங்கிருந்த பல பிள்ளைகளும் அறுவைச்சிகிச்சைக்குப் பின் உயிரோடு இருப்பது அரிது என்பது தெரியவந்தது. எங்களது செப நேரம் முடிந்த பின் இறப்பிற்குப்பின் கிடைக்கும் நிலைவாழ்வை . அந்த விண்ணக சுழலை, இறை பிரசன்னத்தின் மகிழ்வைப் பற்றி விவரிப்பேன். பிள்ளைகள் கண்மலரக் கேட்டுக் கொண்டிருப்பர். ஓ... நம்ம வாழ்வு இங்கோடு முடிந்துவிடாதா. தொடர்ந்து கடவுளோடு வாழும் வாழ்வு ஒன்று இருக்கிறதா? .என்று கேட்டு கொண்ட பிள்ளைகள் அறுவைச் சிகிச்சைக்குப் போகும் போது அது பெரும் வலி என்று தெரிந்தும் அழுததேயில்லை.

சுந்தரிக்கு அறுவை சிகிச்சைக்கு முதல் நாள் அவளுக்கு திருஅவை அனுமதித்திருக்கும் ஆசை திருமுழுக்கை கொடுத்தேன். அவள் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி. அறுவைச் சிகிச்சை முடிந்து சுந்தரி ஆபத்தான கட்டத்தில் இருந்தாள். நான் மனபாரத்தோடு செபித்து கொண்டே தூங்கிப்போக வெள்ளை உடை உடுத்தியவளாய் சுந்தரி என் பக்கத்தில் வந்து பைபிளை ஆசையாய் தொட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ICU வில் இருந்த சுந்தரி இங்கே எப்படி? நான் பதறி எழ அங்கே யாருமில்லை. ஆனால் ICU வில் இருந்து ஒப்பாரிக்குரல் கேட்கிறது. ஆம் அது அவளின் அம்மாவின் குரல். சுந்தரி போய்விட்டாள்... ஆனால் அவள் கடவுளிடம் இருப்பாள் என்பதே என் நம்பிக்கை.

இறப்பு என்பது இருளா? இறப்பு என்பது வலியின் உச்சகட்டமா? இறப்பு என்பது மறைபொருளா? இறப்பு என்பது அழிவா? இறப்பு என்பது வாழ்வு முடிவு பெற்ற நிலையா? இந்தக் கேள்விகளைக் கேட்டுப் பார்த்தால் ஆம், என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம். யாருக்கு இது கொடையாக மாறுகிறது?யாருக்கு இது வேதனையாக மாறுகிறது என்று பார்த்தால் இறைப்பற்றுறுதியுடன் தூய்மையாய் அன்புவழி வாழ்க்கை வாழ்ந்து நம்பிக்கையில் நிலைத்திருந்து எதிர்நோக்கி இருப்பதில் தளரா உள்ளத்தோடு இருப்பவர்களுக்கு இறப்பு என்பது ஒப்பற்ற விலை மதிப்பில்லா கொடையாய் மாறுகிறது. நிலை வாழ்வாய் நிறைமகிழ்வாய் ஒளி வாழ்வாய் இறையோடு இணைந்த நிலையை அளிக்கிறது.

இறை இயேசுவின் இறப்பு, புனிதநிலையில் வாழ்ந்தவர்களின் இறப்பு அது தந்த எதிர்நோக்கு என்பதன் சிறு விளக்கங்களுக்கு விவிலியத்தைப் புரட்டிப் பார்ப்போம்.

**இறப்பு வழி மீட்பு:**

'எவரும்அழியாமல் அனைவரும் நிலைவாழ்வு பெரும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார்' (யோவா 3:16) இயேசுவின் வார்த்தைகளும் வாழ்வும் அவரது பாதைகளும் பயணங்களும் செயல்களும் தந்தைக் கடவுளின் திருவுளம் நிறைவேற்றுவதாகவே இருந்தது. 'கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைத் தரும்' (யோவா 12:24) என்று மீட்பின் அறுவடை குறித்து மறைமுகமாக தனது மரணத்தைச் சொல்லி வெளிப்படையாக பாடுகளை பொறுமையும் சாந்தமுமாய் ஏற்று மரணித்தார். 'நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்' இதுவே அவரின் இறப்பின் எதிர்நோக்கு. ' நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் ... அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் 'என்ன ஒரு வியத்தகு அன்பு நிறைந்த எதிர்நோக்கு. 'தந்தையே! நீர்

என்னை அன்பு செய்வது போல அவர்களையும் அன்பு செய்யுங்கள். என்னோடு இணைந்திருப்பது போல அவர்களோடும் இணைந்திருங்க 'என்ன ஒரு அன்பின் பிணைப்பு! என் மக்களெல்லாம் என்பணி செய்யும் அன்புக்குரிய என் சீடர்களெல்லாம் விண்ணக மாட்சிமையில் பங்குபெற்று மகிழ வேண்டுமே என்னே இந்த கரைகாணா பேரன்பு! ... அது தந்த எதிர்நோக்கே அவரின் இறப்பின் வழியாக அவர் திறந்து வைத்த மீட்பின்பாதையாகும். 'ஆகவே, அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும்' (மத் 6:33) எதிர்நோக்கோடு நாடுவோம்.

**தூயவர்களின் இறப்பு தந்த எதிர்நோக்கு:**

'இறந்த பின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்' ( மக் 7: 9) கொடிய சித்ரவதைச் சாவிற்குக் கையளிக்கப்பட்ட சகோதரர் எழுவரான இளையோர்களின் உறுதியான எதிர்நோக்கு இப்படி இருந்தது என்றால், பன்றி இறைச்சியை உண்ண வேண்டாம் உண்பது போல் நடியுங்கள், சித்ரவதைச் சாவுக்கு தப்பிக்கலாம் என்றவர்களிடம் 'குறுகிய நிலையில்லாத வாழ்வுக்காக நான் இவ்வாறு நடிப்பேனாகில், என் பொருட்டு இளையோரும் நெறி பிறழ நேரிடும். அது என் முதுமையைக் களங்கப்படுத்துவதாகும் ...' ஆண்டவருக்கு நான் அஞ்சுவதால் என் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு இவற்றை ஏற்றுக்கொள்கிறேன்' (2மக் 6:25) என்று இளையோருக்கு முன்மாதிரிகைகாட்டி இறை அன்புக்கு சான்றாய் அவர் இறந்தது அவர் விண்வாழ்வில் வைத்த குன்றா எதிர்நோக்கேயாகும்.

'என் ஆண்டவரை நான் முகமுகமாய்க் காண்பேன்' எல்லாவற்றையும் இழந்து தவித்த நிலையில் உடம்பெல்லாம் புண்களுடன் ஓட்டை வைத்து சொரிந்து கொண்டிருந்த யோபு கூறிய வார்த்தை அவரின் எதிர்நோக்கு எத்துணை திடமானது என்பதை உணர்த்துகிறது.

'பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன். கிறிஸ்து இயேசுவின் மூலம் கடவுள் எனக்கு மேலிருந்து விடுவிக்கும் அழைப்பே அப்பரிசாகும்' (பிலி 3:14) விண்ணகத்தில் தனது நங்கூர நம்பிக்கையை அழுத்தமாய் போட்டுவிட்டு மண்ணகத்தில் எதிர்நோக்கோடு பணி வாழ்வின் உறுதியான ஓட்டத்தில் தூய பவுல் கூறிய வார்த்தைகள் இவை. என்ன நேர்ந்தாலும் வாழ்விலும் சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவைப் பெருமைப்படுத்திப் பார்த்த பரவசம் பேராவல் அவரில் பிரதிபலிக்கிறது. இவ்வுலகில் நாம் பயணிகள், தற்கால குடிகள் நமக்கு விண்ணக வீடு ஒன்றிருக்கிறது. அங்கு சென்று சேர வேண்டும் என்ற எதிர்நோக்குடன் கூடிய இலக்குடன் திடமாய் தடம்பதித்து வரலாறு படைத்தவர்களின் வார்த்தைகளும் இப்படித்தான் நமக்கு முன் சான்றாண்மை காட்டி நிற்கிறது.

'நான் கோதுமை மணியாய் இருக்கிறேன். கோதுமை மணி இந்த சிங்கங்களுக்கு இரையாவதன் மூலம் என் உடலை அப்பமாக மாற்றி கடவுளுக்கு என் வாழ்வை அர்ப்பணிப்பேன் 'வேதகலாபனை காலத்தில் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டு தூய பங்கிராஸ் கூறிய வார்த்தைகள் இவை. இது ஒரு சின்ன உதாரணம்தான். ஒவ்வொரு புனிதர்களுமே விண்ணகத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்துவிட்டு வையகத்தில் எதிர்நோக்கோடு அன்புவழி இறைப்பணியாற்றியவர்கள். நமக்கு விட்டு சென்ற வலுவான அடையாளங்களானவர்கள் ஆவர். 'இதுமுதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர். ஆம் அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்; ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும்' என்கிறது விண்ணகக் குரல் (திவெ 14:13).

**நமது இறப்பின் எதிர்நோக்கு:**

திருசட்டப்படி நடந்து இறைக்கட்டளைகளில் சிறியவற்றைக் கூட மீறாமல் அவற்றைக் கடைபிடித்துக் கற்பிப்பவர்களே 'விண்ணரசில் பெரியவர் 'என்கிறார் நம் இயேசு. விண்ணகத் திருவுளம் நிறைவேற்றுதலால், உடைமைகள் மீது பற்றுதலின்றி வாழ்தலால், இயேசுவை ஆடையாய் அணிந்து கொண்டவர்களாய் இயேசு என்ற பாறை மீது வீட்டைக் கட்டும் அறிவார்ந்த செயலால், விழிப்பாய் ஆயத்தமாய், தூய்மையாய் இருத்தலால், நமது தாலந்துகளை பயன்படுத்துதலால், அனைத்திற்கும் மேலாக இறை ஆட்சியைத் தேடுதலால் என்கிற படிநிலைகள் விண்ணகத்திற்கு நம்மை இட்டுச்செல்லும் வாழ்வியலாகும்.

'மிகச் சிறியோராகிய இவர்களுள் .... எனக்கே செய்தீர்கள்' (மத் 25:) 'உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்' (மத் 35:14) என்கிறார் நம் அன்பு தெய்வம்.

அவர் வரும் வேளையோ நேரமோ நமக்குத் தெரியப்போவதில்லை. எப்போதும் தயார் நிலையில் எதிர்நோக்கிக் காத்திப்போம்' ஆண்டவரே என் முடிவு பற்றியும் என் வாழ்நாளின் அளவு பற்றியும் எனக்கு அறிவுறுத்தும்' (திபா 39:4) என மனிதரின் நிலையாமை பற்றி விளக்குகிறது இந்த திருப்பாடல். உச்ச நிலையிலுள்ள நீர் குமிழி போன்ற இவ்வாழ்வில் இறைமதிப்பீடுகளின்படி வாழ்ந்து எதிர்நோக்கில் உறுதிபடுவோம். துன்ப துயர வேதனை சோதனைகளில் இயேசு 'வெற்றி பெற்று தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பது போல் வெற்றி பெறும் அனைவருக்கும் தமது அரியணையில் அவரோடு வீற்றிருக்கும் உரிமையைத்' (திவெ 3:21) தருவதாக வாக்களிக்கிறார் நம் இயேசு. எனவே, சிறந்ததோர் எதிர்நோக்கு வழி கடவுளை அணுகிச் செல்வோம். இறப்பில் இறவாமையை அடைவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

13ஆம் பக்க தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 36. | நற்பணி து. மைக்கேலம்மாள். | கண்ணாங்குடி |
| 37. | நற்பணி J. சகாயமேரி | கண்ணாங்குடி |
| 38. | நற்பணி அ. செங்கோல் அம்மாள். | இலுப்பங்குடி |
| 39. | நற்பணி ஆ. சகாயராணி. | பாப்பா ஊரணி |
| 40. | நற்பணி தே. சாந்தி டினோசியா. | முள்ளிக்குண்டு |
| 41. | நற்பணி ம. ஜூலியா. | இராம்நகர் |
| 42. | நற்பணி S. ரோஸ்லின் சிறிய புஷ்பம். | இராம்நகர் |
| 43. | நற்பணி அ. லிஷா. | இராம்நகர் |
| 44. | நற்பணி அ. மார்கிரேட் செல்வி. | சி.கே.மாங்கலம் |
| 45. | நற்பணி ரா. லீமா ரோஸ். | மேலவயல் |
| 46. | நற்பணி ஜா. மல்லிகா. | குஞ்சங்குளம் |
| 47. | நற்பணி அ. ஆசைமேரி. | தளிர்மருங்கூர் தெற்கு |
| 48. | நற்பணி சு. புஷ்பா. | தளிர்மருங்கூர் தெற்கு |
| 49. | நற்பணி அ. ஜோஸ்பின். | தளிர்மருங்கூர் தெற்கு |
| 50. | நற்பணி பி. ஜெயசீலி. | தளிர்மருங்கூர் தெற்கு |
| 51. | நற்பணி ஆ. மேரி. | மண்டலக்கோட்டை |
| 52. | நற்பணி ப.ஆரோக்கிய புஷ்பலதா. | மண்டலக்கோட்டை |
| 53. | நற்பணி ஜோ. ஆரோக்கிய மாதரசி. | வில்லாரேந்தல் |
| 54. | நற்பணி A. சகாய அமுதா ராணி. | ஆர்.எஸ். மாங்கலம் |
| 55. | நற்பணி ஜா. ரேவதி. | அழியாதான்மொழி |
| 56. | நற்பணி ஐ. ஆரோக்கிய கோகிலா மேரி. | ஏ.ஆர். மாங்கலம் |
| 57. | நற்பணி எஸ். ஜெயசீலி மேரி. | நெடும்புலிகோட்டை |
| 58. | நற்பணி ஆ. அருள் சேவியர். | தெற்கனேந்தல் |
| 59. | நற்பணி அ. ஆரோக்கியசாமி. | கரவளத்தி |

# நவம்பர் 2025 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.11.25 | இதயத்தை நோக்கி<br>யூபிலி ஆண்டு திருப்பயணம் | இடைக்காட்டூர் |
| 02.11.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | காளையார்கோவில் |
| 03.11.25 | நற்பணி சார்லஸ் புதிய இல்லப்<br>புனிதப்படுத்தும் விழா | கமுதி |
| 05.10.25 | அருளமுது ஆதாரக்குழு<br>கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்.<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 7.8 &<br>9.11.25 | ஆண்டுத்தியானம் VII | அருள்சான்று நிலையம், பாரமக்குடி |
| 8&9.11.25 | தொடர் களப்பணி | பெருமாள்குரும்பன் பட்டி, கமுதி |
| 08.11.25 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம் |
| 08.11.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில், தாங்கச்சிமடம் |
| 08.11.25 | கலந்துரையாடல்<br>தூத்துக்குடி மறைமாவட்டம் | அருள்சான்று நலையம்<br>பரமக்குடி |
| 09.11.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி, காளையார்கோவில்<br>புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில், ஓரியூர் |
| 9.11.25 | வட்டாரத் தியானக்கூட்டம் | செஞ்சை, சி.கே. மங்கலம்.<br>புதுக்கோட்டை, கோட்டைக்காடு, பட்டுக்கோட்டை, பூதலூர் |
| 14.15 &<br>16.11.25 | ஆண்டுத்தியானம் VIII | அமல அன்னை அமைதியம், காயாவயல் |
| 16.11.25 | தொடர் களப்பணி | எழுவன்கோட்டை கிராமம், இராம்நகர் பங்கு<br>பூரண மங்கலம் கிராமம், சாயல்குடி, நானாக்குடி பங்கு |
| 16.11.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | மகிண்டி மிக்கேல் பட்டணம், பரமக்குடி,<br>காளையார்கோவில், கமுதி |
| 16.11.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியம், காயாவயல்<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி<br>புனித பேதுரு கோவில், சி.கே. மங்கலம்<br>அம்மாபேட்டை, திருமயம் |
| 22.1125 | 'வானவில்' தணிக்கைக்குழு<br>கூட்டம் | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி |
| 23.11.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், இரசசிங்க மங்கலம்<br>திருவாரூர், நமணசமுத்திரம் |
| 23.11.25 | வட்டாரத் தியானக் கூட்டம் | சாலைகிராமம், செக்காலை, சிவகங்கை,<br>இராம்நகர், இராமநாதபுரம், முத்துப்பேட்டை |
| 30.11.25 | விரிவாக்க உள்ளுயிர்க் குழு கூட்டம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

நாம் பேசும் வார்த்தைகள் சாவிகளைப் போல....
சில - பலரது இதயங்களைத் **திறந்து விடும்.**
சில -பலரது வாய்களையும் **பூட்டிவிடும்.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

குழலும் யாழும் இன்னிசை எழுப்புகின்றன; இனிய சொல் இவ்விரண்டினும் சிறந்தது. (சீராக் 40:21)

## புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.11.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. லூயி ஆரோக்கியசாமி<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 08.11.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 09.11.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 09.11.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி பெ. தெரசா மிரண்டா<br>நற்பணி J. சார்லஸ் |
| 09.11.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி GMS. ராணி<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 09.11.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 16.11.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி |
| 16.11.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி J. ரபேக்கா |
| 16.11.25 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி |
| 23.11.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



உம்து வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகார் (யோவா 8:51) என்று உரைத்த இறைவா!

உம் வார்த்தைக்கு விழா எடுத்துக் கொண்டாடி மகிழ்ந்திருக்கும் நாங்கள், உமது வார்த்தையால் புதுப் பிறப்படைந்துள்ளவர்களாய் (1பேதுரு 1:23)வாழ, இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து,எங்களை ஏமாற்றிக் கொள்ளாமல் (யாக் 1:22) உமது அன்பு எம்மில் நிறைவடையும் பொருட்டு உண்மையாய் உண்மையைக் கடைப் பிடிக்க (1யோவா 2:5) எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# தஞ்சை மறைமாவட்ட புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 09.11.25 II | திரு இருதய ஆண்டவர் கோவில். புதுக்கோட்டை | நற்பணி L. ஆரோக்கியசாமி 9150579311 நற்பணி A. ஆரோக்கியசாமி 9843323439 |
| 09.11.25 II | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 நற்பணி தை. அமல்ராஜா 8838425389 |
| 09.11.25 II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 நற்பணி M. அருள்மரியநாயகம் 9500392287 |
| 09.11.25 II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | செயலர் 9787967272 நற்பணி A. ஆரோக்கியசாமி 9787037717 |
| 16.11.25 III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206 நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 16.11.25 III | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி S. அந்தோணிபிரகாஷ் 9787791869 நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ 9443503618 |
| 23.11.25 IV | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206 நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 23.11.25 IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி A. யூஜின் அமல்ராஜ் 8270140484 நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ 9443503618 |




"மிகச் சிறியோராகிய இவர்களுக்கு செய்த உதவிகளை எல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:40).

13 ஆம் நூற்றாண்டில் ஹங்கேரி நாட்டை ஆண்டுவந்த இரண்டாம் ஆன்ட்ரு என்பவரின் மகளாகப் பிறந்தவள்தான் எலிசபெத். இவர் அரச குடும்பத்தில் பிறந்தாலும் அந்த மினுக்கும் ஆடம்பரமும் இல்லாமல் மிகச் சாதாரணமாக வாழ்ந்ததுதான் இவருடைய தனிச் சிறப்பு. எலிசபெத் சிறுவயதிலே மிகவும் பக்தியாகவும் எளிமையாகவும் ஏழைகளுக்கு உதவும் நல்ல மனப்பான்மையோடும் வாழ்ந்து வந்தார். இவருக்கு பதினான்கு வயதில் ஜெர்மனியில் உள்ள தூரின்ஜியன் என்ற நகரில் மன்னராக இருந்த லூயிஸ் என்பவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டது. திருமணம் ஆனபிறகும் கூட எலிசபெத் ஏழைகளுக்கு உதவுவதையும் பக்தியில் வளர்வதும் ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுவதும் குறைந்து போய்விடவில்லை. அவருடைய கணவரான மன்னர் லூயிஸ் எலிசபெத்தை அளவு கடந்த விதத்தில் அன்பு செய்தார். அவர்கள் இருவரின் அன்பின் வெளிப்பாடாக மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். இப்படிப்பட்ட தருணத்தில்தான் 1227 ஆம் ஆண்டு மன்னர் லூயிஸ் போருக்குச் செல்லும்போது போகும் வழியிலே காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்துபோனார். இந்த துயர செய்தி அவரை மிகுந்த வேதனையில் ஆழ்த்தியது. இருப்பினும் இறைஉதவியுடன் இத்துயரத்திலிருந்து விடுபட்டு தமது மூன்று பிள்ளைகளையும் கடவுளுக்கு ஏற்ற பிள்ளைகளாக வளர்த்தார். இச்சமயத்தில் பிரான்சிஸ் அசிசியாரால் ஈர்க்கப்பட்டு அரசி எலிசபெத் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் சேர்ந்தார். அரசியின் ஆடைகளை துறுந்து. மூன்றாம்சபை உறுப்பினர்கள் அணியும் எளிய ஆடையையே உடுத்தி வந்தார். இதனால் பலரின் இழிச்சொல்லுக்கு ஆளானார்.

எலிசபெத் ஆண்டவர் இயேசுவின் மீதும் அன்னை மரியாவின்மீதும் ஆழமான பக்தி கொண்டு வளர்ந்து வந்தார். அதன் பயனாக ஆண்டவர் இயேசுவும் அன்னை மரியாவும் அவருக்கு நிறைய முறை காட்சி கொடுத்து பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தினார்கள்.

1225 ஆம் ஆண்டு ஹங்கேரியில் பிளேக் நோய் பரவியபோது இவர் நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்தியில் சென்று அவர்களுக்கு உதவி புரிந்தார். அதுமட்டுமல்லாமல் நோயினால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளியவருக்கு தன்னுடைய ஆடை ஆபரணங்களை விற்று. அதன்மூலமாக வந்த பணத்தை வைத்து அவர்களுக்கு உதவி புரிந்தார். இவ்வாறு அவர் அரசியாக இருந்தும். எப்போதும் ஏழைகளின் பங்காளராய் இருந்து வந்தார்.

இப்படி ஆன்மீகத்திலும் ஏழைகள் மீதும் அக்கறை கொண்டு வாழ்ந்த எலிசபெத் தன்னுடைய 24 ஆம் வயதில் இறந்தார். இவருடைய கல்லறையில் அதிகமாக புதுமைகள் நடந்தன. இதன் விளைவாக இவருக்கு 1235ஆம் ஆண்டு இவருக்கு புனிதர் பட்டம் கொடுக்கபட்டது.

அவரைப்போன்று நாமும் ஆன்மீகத்தையும் அறப்பணியையும் இருகண்களென போற்றி வாழ்வோம்.

.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.

ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) என்பவை, ஆலோசனை அமர்வின்போது வாடிக்கையாளருடன் திறம்படத் தொடர்புகொள்ளவும், அவர்களுக்கு உதவவும், உறவை உருவாக்கவும் ஆலோசகருக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட, கவனிக்கத்தக்க திறன்களின் தொகுப்பாகும். கடந்தபகுதியில்முதல்மூன்று உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி சுருக்கமாக பார்த்தோம். இப்பகுதில்மற்ற நான்கு ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.




**4. சுருக்கமாகக் கூறுதல்** (Summarizing)

இது வாடிக்கையாளர் நீண்ட நேரம் பேசியதையோ அல்லது ஆலோசனை அமர்வின் ஒரு பகுதியை முடிக்கும் முன்னரோ, அதன்முக்கியமான கருத்துக்கள், உணர்வுகள் மற்றும் கருப்பொருட்களைத் தொகுத்துவாடிக்கையாளரிடம் மீண்டும் எடுத்துரைப்பதாகும்.

**முக்கியக் கூறுகள்:**

- **உள்ளடக்கம் மற்றும் உணர்வுகளைச் சேகரித்தல்:** வாடிக்கையாளரின் கூற்றுகளில் இருந்து முக்கியமான தகவல்களையும், அவர்கள் வெளிப்படுத்திய ஆழமான உணர்வுகளையும் (சோகம், கோபம், மகிழ்ச்சி) பிரித்தெடுத்தல்.
- **வார்த்தைகளில் தொகுத்தல்:** அவற்றை சுருக்கமாகவும், துல்லியமாகவும், வாடிக்கையாளருக்குப் புரியும் வகையிலும் தெளிவாக எடுத்துரைத்தல்.
- **சரிபார்த்தல்:** 'நான் புரிந்துகொண்டது இதுதான்: நீங்கள் உங்கள் வேலையை இழந்துவிட்டதால் கோபமாகவும், குழப்பமாகவும் இருக்கிறீர்கள். இது சரியா?' என்று வாடிக்கையாளரிடம் கேட்டுச் சரிபார்த்தல்.

**5. ஊக்குவித்தல்** (Encouraging)

இது வாடிக்கையாளர் தங்கள் கதையைத் தொடர்ந்து சொல்ல, சிந்திக்க அல்லது உணர்வுகளை வெளிப்படுத்தத் தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நுட்பமான, வாய்மொழி அல்லது உடல் மொழி சமிக்ஞைகள் ஆகும். இதுஆதரவையும் அங்கீகாரத்தையும்வெளிப்படுத்தும்.

**முக்கியக் கூறுகள்:**

- **குறுகிய தூண்டிகள்** (Minimal Encouragers): ' ம்ம்ம்', 'ஓஹோ', 'அப்புறம்?' அல்லது தலையை ஆட்டுதல் போன்ற சிறிய சைகைகள்.

- **மறுபடியும் கூறுதல்** (Restatement) : வாடிக்கையாளர் சொன்ன ஒரு முக்கியமான வார்த்தையையோ, சொற்றொடரையோ மீண்டும் கூறுவது (எ.கா: வாடிக்கையாளர்: 'நான் அங்கே தனியாக உணர்ந்தேன்.' ஆலோசகர்: 'தனியாக உணர்ந்தீர்களா?').
- **துணிச்சலான ஆதரவு:** 'தொடர்ந்து சொல்லுங்கள், நான் கேட்கிறேன்', 'இது ஒரு முக்கியமான பகுதி' என்று வெளிப்படையாகக் கூறுவது.

**6. எதிர்கொள்ளுதல்** (Confrontation)

இது வாடிக்கையாளரின் கூற்றுகளுக்கும், செயல்களுக்கும் அல்லது உணர்வுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை (Inconsistencies) ஆலோசகர் கவனத்துடன் சுட்டிக்காட்டி, அதை வாடிக்கையாளர்ஆழமாகச் சிந்திக்கத்தூண்டும் நுண்திறன் ஆகும். இது சண்டையிடுவது அல்ல, மாறாகப் பிரச்சினையை நேரடியாக அணுகுவதாகும்.

**முக்கியக் கூறுகள்:**

- **முரண்பாடுகளைக் கண்டறிதல்:** வாடிக்கையாளர் சொல்வதற்கும் (எ.கா: 'நான் மாற விரும்புகிறேன்') அவர் செய்வதற்கும் (எ.கா: மாற்றத்தை நோக்கி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை) இடையே உள்ள வேறுபாட்டைக் கண்டறிதல்.
- **ஆதரவுடன் வழங்குதல்:** இந்த முரண்பாட்டைத் தாக்குதலாக அல்லாமல், அக்கறையுடன் கூடிய கேள்வியாகவோ, கூற்றாகவோ முன்வைத்தல். (எ.கா: 'நீங்கள் கோபமாக இருப்பதாகச் சொல்கிறீர்கள், ஆனால் உங்களை அறியாமல் சிரிப்பது போல் தெரிகிறது. இந்த இரண்டும் உங்களுக்கு என்ன சொல்கிறது?').
- **தீர்வைக் கோருதல்:** இந்த முரண்பாட்டின் அர்த்தம் என்ன, ஏன் இது நிகழ்கிறது என்பதை வாடிக்கையாளரே ஆராயத் தூண்டுதல்.

**7. கவனம் செலுத்துதல்** (Focusing)

இது ஆலோசனை அமர்வின்போது, வாடிக்கையாளர் அல்லது ஆலோசகரால் முன்வைக்கப்படும் பல தலைப்புகள், நபர்கள் அல்லது பிரச்சினைகள் ஆகியவற்றில் இருந்து, மிக முக்கியமான ஒரு விஷயம் மீது மட்டும்கவனத்தைக் கொண்டு வருவதாகும்.

**முக்கியக் கூறுகள்:**

- **தனிநபர் மீது கவனம்:** வாடிக்கையாளரின் சொந்த அனுபவங்கள், உணர்வுகள் மற்றும் தேவைகள் மீது கவனத்தை நிலைநிறுத்துதல்.
- **தலைப்பைக் குறைத்தல்:** வாடிக்கையாளர் பேசும் பலதரப்பட்ட பிரச்சினைகளில் இருந்து, இந்த அமர்வுக்கு மிகவும் தேவையான ஒரே ஒரு மையப் புள்ளியைத் தேர்ந்தெடுத்து, அதைப் பற்றி மட்டும் பேசத் தூண்டுதல்.
- **மற்றவர்கள் மீதான கவனத்தைத் திருப்புதல்:** வாடிக்கையாளர் தொடர்ந்து மற்றவர்களைப் (குடும்பம், நண்பர்கள், முதலாளி) பற்றிப் பேசும்போது, கவனத்தைத் 'நீங்கள் அந்தச் சூழ்நிலையில் எப்படி உணர்ந்தீர்கள்?' என்று வாடிக்கையாளர் பக்கமாகத் திருப்புதல்.

**அசைபோடஅரைநிமிடம் :**

''ஆலோசகரின் நுண் திறன்கள்இலக்கு சார்ந்த உறவை உருவாக்க அத்தியாவசியமான அடிப்படைக் கருவிகள் ஆகும்''

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனிதன் தேவையில்லை. உறவுகளை மதிக்க தேவையில்லை. பணம் மட்டும் இருந்தால் உலகில் அனைத்தையும் ஏன். கடவுளையும் கூட வாங்கி விடுவேன் என்று நினைத்து வாழ்கிறான் மனிதன். இவ்வுலகில் நடக்கும் அத்துணை தீமைகளுக்கும் ஆணி வேராக இருப்பது பணம்தான். “பொருள் ஆசையே எல்லா தீமைகளுக்கும் ஆணிவேர்” (1 திமொ 6:10). எவ்வளவு பெரிய கடினமாக காரியமாக இருந்தாலும் பணத்தை தூக்கி எரிந்தால் அனைத்தையும் வாங்கி விடலாம் என்ற மமதையில் வாழ்கின்றோம். ஆனால். பணத்தால் எல்லாவற்றையும் வாங்கலாம். கடவுளின் இரக்கத்தையும் அன்பையும் வாங்க முடியுமா?

பணத்தை கொண்டு சாதிக்கப்டும் செயல்கள் அனைத்திற்கும் பின்னால் வரும் துன்பங்களுக்கு நாமே காரணம் என்பதையும். இதனால் உன் சந்ததிகள் பாதிக்கப்படும் என்பதை உணர மறுக்கிறோம். நாள்கள் கரைந்தால் வாரம். வாரம் கரைந்தால் மாதம். மாதம் கரைந்தால் வருடம். வருடம் கரைந்தால் யுகம். யுகம் கரைந்தாலும் என்றுமே கரையாதது கடவுளுன் அன்பு என்பதை நம் கண்களில் ஒளியாக தெரிய வேண்டும் (மத் 16:24) (லூக் 18:23. மாற்கு 10:25).

ஓ மானிடா! இரவு முடிய போகிறது! பகல் உன்னை நெருங்கி கொண்டே வருகிறது. இன்று இரவே உனது உயிர் உன்னை விட்டு பிரிந்துவிடும். அப்போது நீ சேர்த்து வைத்தது யாருடையதாகும் (லூக் 12:20). ஆகவே நான் இப்படித்தான் வாழ்வேன் என்று அடம்பிடித்து வாழ்வதை இன்றே இப்பொழுதே நிறுத்திவிட்டு. பணத்தின் மீதுள்ள பேராசையை உடைத்து எரிந்து விட்டு பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை என்பதை உணர்ந்து அன்பு. கருணை. மன்னிப்பு. மகிழ்ச்சி. பண்பு பரிவு. பாசம். பகுத்தறிவு. ஞானம் இவையெல்லாம் தருகின்ற இறைமகன் இயேசுவே எனக்கு எல்லாம் என்றும். இனி நான் விண்ணத்தில் மட்டுமே செல்வனாய் இருக்க. இம்மண்ணக வாழ்வில் மனிதர்களை அன்பு செய்யவும். உறவுகளை மதிக்கவும் கற்றுக் கொள்வோம். எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வெற்றி நடை போடுவோம்.

நற்பணி **லூவனா,** தங்கச்சிமடம்.

## ஆண்டுத் தியானம் 2026 நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு. சிவகங்கை

| நாள் | குழு | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| நவம்பர் 07,08& 09 | VII | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி S. இராஜேந்திரம் நற்பணி சூ. ஜஸ்டின் |
| நவம்பர் 14,15& 16 | VIII | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோடு | நற்பணி L. ஆரோக்கியசாமி நற்பணி A.R.ஆசைராஜ் |

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம், எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலே நடக்க முயலுவோம் என்ற அழைப்பை மறந்து உலகம் காட்டும் நெறியிலே நடந்து தூய ஆவியாரின் துணையை உதறித்தள்ளி வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (கலா 5:25).

- கிறிஸ்து அடிமை நிலையிலிந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்; அதில் நிலைத்திருங்கள் என்பதை மறந்து மூட மற்றும் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைபட்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (கலா 5:1).

- நன்மை செய்வதில் மனம் தளராதிருப்போமாக. என்ற அழைப்பை மறந்து நன்மை செய்ய கிடைத்த வாய்ப்புகளை தவறவிட்டதை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (கலா 6:9).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

இம்மாதச் செபக் கருத்து

- வாழ்வில் மனமுடைந்து தற்கொலைக்கு முயற்சிப்போர் சமூகம், மற்றும் குடும்பத்தின் அக்கறையால் வாழ்வு மாற்றம் பெற.
- தோல்வியை ஏற்றுக்கொள்ள இயலாமல் தவறான முடிவுகளை எடுக்கும் இளையோருக்காக.
- பீகார் மாநிலத்தில் நடைபெறும் சட்டசபை தேர்தல்கள் நேர்மையுடனும், சனநாயக மரபுகளுடன் அமைதியுடனும் நடைபெற.
- விண்ணகப் பிறப்படைந்த நற்செய்திப் பணியாளர்களின் ஆன்மாக்கள் இறைவனில் இளைப்பாற்றி அடைய.
- உலகில் போர் மற்றும் குழப்பங்கள் நடைபெறும் இடங்களில் அமைதி நிலவ
- இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகளும், அரசியலமைப்புச் சட்டங்களும் பாதுகாகப்பட்டு போற்றப்பட.
- சரியான மழைபெய்து விவசாயம் செழிக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- விண்ணகப் பிறப்படைந்த ஒரு நற்செய்தி பணியாளரின் ஆன்மா நிலைவாழ்வைப் பெற மாதம் முழுவதும் செபித்தல்.
- யூபிலி ஆண்டில் இயேசுவில் விளங்கிய சாந்த குணத்தில் நாளும் வளர்தல்.

# புதிய பணியாளர்கள் பயிற்சி


காளையார்கோவில்


அமைதியகம்


திருவாரூர்


களப்பணி-புளம்பாடி
கும்பகோணம் வட்டாரம்


மரியின் ஊழியர் சபை நவதுறவியர்
களப்பணி



மரியின் ஊழியர் சபை நவதுறவியர்
நற்செய்தி அறிவிப்பு பயிற்சி



ஆயர் பேரவை
நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு கூட்டம் - திருச்சி

படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருவெளிப்பாடு 20-22 அதிகாரங்களுக்குள்**



# ஆண்டுத் தியானம்




















**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com